# In the Court of the District Munsif, Eraniel

## Original Suit No. 108/2014

Deposition of the PW1

Name : Gnanaselvi Date: 03.09.2025

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1. 20.12.2021 தேதியிட்ட மாண்புமிகு இரணியல் சார்பு நீதிமன்ற OS.No. 27/2019 தீர்ப்பு (இணைய நகல் ) வாசாஆ. 16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 11.06.2020 தேதியிட்ட மாண்புமிகு இரணியல் சார்பு நீதிமன்ற OS.No. 27/2019 எழு வினாக்கள் ( நீதிமன்ற சான்றிட்ட நகல் ) வாசாஆ. 17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 19.12.2022 தேதியிட்ட மாண்புமிகு இரணியல் சார்பு நீதிமன்ற IA.No. 1 of 2022 in OS.No. 27 of 2019 உத்தரவு ( நீதிமன்ற சான்றிட்ட நகல் ) வாசாஆ. 18 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 19.12.2022 மாண்புமிகு இரணியல் சார்பு நீதிமன்ற IA.No. 1 of 2022 in OS.No. 27 of 2019 உத்தரவாணை ( நீதிமன்ற சான்றிட்ட நகல் ) வாசாஆ. 19 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 30.07.2025 தேதியிட்ட மாண்புமிகு இரணியல் சார்பு நீதிமன்ற IA.No. 2 of 2023 in IA.No. 1 of 2022 in OS.No. 27 of 2019 உத்தரவு ( இணைய நகல் ) வாசாஆ. 20 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 30.07.2025 தேதியிட்ட மாண்புமிகு இரணியல் சார்பு நீதிமன்ற IA.No. 2 of 2023 in IA.No. 1 of 2022 in OS.No. 27 of 2019 உத்தரவாணை ( இணைய நகல் ) வாசாஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்

**<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. 1ம் வாதியின் சகோதரியின் கணவர் தான் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மாடசாமி , எனது கணவரின் தாய் மாமன் என்றால் சரிதான். மேற்படி மாடசாமி என்பவர் ஓய்வு பெற்ற தாசில்தார் என்றால் சரிதான். 1ம் வாதியின் தகப்பனாரான ராமசாமி யார் என்றால் எனது மாமனார் ஆவார். வாசாஆ. 1 ஆவணப்படி வின்செண்ட் ராஜ் மற்றும் ராமசாமி என்பவர்கள் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராமசாமி என்பவர் எனது மாமனார் என்றால் சரிதான். 02.02.2021 தேதிய வாசாஆ 1 ஆவணத்தின் அடிப்படையில் கிரயம் செய்யப்படவில்லையென்றால் சரிதான்.

2. வாசாஆ. 2 ஆவணமான வில்பிரட் ராஜ் எனது கணவருக்கு எழுதி கொடுத்த கிரய பத்திரத்தில் 02.02.2021 தேதியிட்ட கிரய ஒப்பந்த ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை ( சாட்சி ஆவணத்தை பார்த்து பதிலளித்தார்)வாசாஆ. 1 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் வாசாஆ. 2 ஆவணத்தில் அதை பற்றி குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல. வாசாஆ. 2 ஆவணத்தில் முன் பணம் கொடுத்தது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான்.

3. வாசாஆ. 3 ஆவணத்தின் படி வழக்கு பட்டிகை சொத்தின் ஒரு பகுதியை 1ம் பிரதிவாதியான மாடசாமி என்பவர் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வாசாஆ. 2 ஆவணத்தின் படி எனது கணவருக்கு எவ்வளவு செண்ட் சொத்து கிடைத்தது என்றால் 8 செண்ட் சொத்து உள்ளது. வாசாஆ. 3 ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதிக்கு 8 செண்ட் நிலம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவருக்கு வழக்கு பட்டை க சொத்தில் 8 செண்ட் நிலம் தான் உரிமைப்பட்டது என்றால் சரிதான்.எனவே எனது பெயரில் எனது கணவர் 16 செண்ட் நிலத்தை பொறுத்து எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சட்டபடி செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல.

4. என்னிடம் காட்டப்படும் வாசாஆ 4 ஆவணத்தில் 2வது பக்கத்தில் தபசில் சொத்து என் பெயருக்கு இரணியல் சார்பதிவாளர் அலுலக ஆணை எண் 1975/2002 ஆவணப்படி தனக்கு பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான், மேலும் அனுபவம் மற்றும் கைவச பாத்தியப்படி என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி வாசாஆ 4 ஆவணத்தில் எவ்வளவு சொத்து தனது கைவச அனுபவத்தில் உள்ளதாக - குறிப்பிட்டுள்ளார் என்றால் முழு சொத்தையும் குறிப்பிட்டுள்ளார். மேற்படி வாசாஆ 4 ஆவணத்தில் இரணியல் சார்பதிவாளர் அலுலக ஆணை எண் 1975/2002 ஆவணப்படி கிடைத்த சொத்தை தான் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

5. வாசாஆ. 4 ஆவணம் மோசடியான ஆவணம் என்று கன்னியாகுமரி மாவட்ட குற்றவியல் பிரிவு, நிலஅபகரிப்பு பிரிவில் என் மீதும் என் கணவர் மற்றும் வேறு சிலர் மீதும் 2ம் பிரதிவாதியால் புகார் அளிக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை எண் 72/2014 ஆக 18.10.2014 ல் ப திவு செய்யப்பட்டது என்றால் சரிதான், அது பொய் வழக்காகும், அது விசாரணைக்கு வரவில்லை. மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் நானும் எனது கணவரும் கைது செய்யப்பட்டோம் என்றால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் திருநெல்வேலி சிறப்பு நீதிமன்றம் (நிலஅபகரிப்புவழக்கு ) ல் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கு தற்போது குழித்துறை நீதிதுறை நடுவர் எண் 2 முன்பு நிலுவையில்உ ள்ளது என்றால் சரிதான், அது செல்லாது என்று நான் குழித்துறை கூடுதல் மாவட்ட நீதிபதியிடம் மனு தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி வழக்கில் தற்போதும் ஆஜராகி வருகிறேன் என்றாலும் அவ்வாறு நான் குறிப்பிட்டவாறு எந்த மனுவும் தாக்கல்ெ சய்யவில்லையென்றாலும் சரியல்ல.

6. நான் மேலே குறிப்பிட்ட குழித்துறை கூடுதல் மாவட்ட நீதிபதியிடம் மனு தாக்க செய்துள்ளதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் கூறியவாறு எந்த மனுவும் குழித்துறை கூடுதல் மாவட்ட நீதிபதி முன்பு எந்த மனுவும் தாக்கல் செய்யாத காரணத்தினால் தான் மேற்படி மனுவை இந்நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல.

7. வாசாஆ. 5 ஆவணப்படி 2ம் பிரதிவாதி , 1ம் பிரதிவாதியிடம் 8 சென்ட் நிலம் கிரயம் பெற்றதாக தெரிய வருகிறது என்றால் சரிதான், ஆனால் அது செல்லாத ஆவணம் . மேற்படி வாசாஆ. 5 ஆவணம் செல்லாத ஆவணம் என்று நான் ஏதேனும் பிகார் அளித்துள்ளேனா என்றால் புகார் கொடுக்கிவல்லை, வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்த சொத்தான 16 சென்டிற்கு என் பெயரில் பட்டா கிடைக்கபெற்றது என்றால் சரிதான். மேற்படி என் பெயரில் 16 சென்டிற்கு பட்டா வழங்கியதை எதிர்த்து 2ம் பிரதிவாதி பத்மாநாபபுரம் கோட்டாட்சியர் முன்பு மனு கொடுத்தார் என்றால் சரிதான்.

8. மேற்படி மனுவின் அடிப்படையில் கோட்டாட்சியர் விசாரித்தார் என்றால் சரிதான். மேற்படி விசாரணையின் அடிப்படையில் என் பெயரில் 16 சென்ட் சொத்திற்கு பட்டா வழங்கியது தவறு என்று கோட்டாட்சியர் உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் 30.10.2014 தேதியில் பத்மாநாபபுரம் கோட்டாட்சியர் வழங்கிய உத்தரவு என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் மேல் நான்

மேல் முறையீடு செய்துள்ளேன். மேற்படி ஆவணம் **பிவாசாஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி உத்தரவின் மீது நான் கன்னியாகுமரி மாவட்ட வருவாய் அலுவலர் முன்பு சீராய்வு மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மேல் முறையீடு இந்த அசல் வழக்கு நிலுவையில் உள்ள காரணத்தினால் விசாரணை செய்ய முடியாது என்று முடித்து வைக்கப்பட்டது என்றால் சரிதான்.

9. என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவில் 4ம் பக்கத்தில் 1வது பத்தியில் மேல் முறையீட்டாளர் மற்றும் எதிர் மேல் முறையீட்டாளருக்கு தலா 8 சென்ட் நிலம் சமமாக பாத்தியப்பட்டதாக தெரிய வருகிறது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது இறுதி உத்தரவாகாது. மேற்படி உத்தரவில் தாவா சொாத்து குறித்து நீதிமன்றம் தீர்வு காணப்பட வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாName ல் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவு என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பிவாசாஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. எனது கணவர் பெயரில் கிரயம் பெறப்பட்ட 8 சென்ட் சொத்தில் தான் என் வீடு உள்ளது என்றால் சரியல்ல, நடுவில் அமைந்துள்ளது. எனது கணவர் பெயரில் கிரயம் பெறப்பட்ட 8 சென்ட் சொத்தில் தான் என் வீடு உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல, என் வீடு போக மரப்பட்டறையும் தாவா சொத்தில் அமைந்துள்ளது. என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையர் வரைப்படத்தில் என்னுடைய வீடு எனது கணவர் முதலில் கிரயம் பெற்ற 8 சென்ட் நிலத்தில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

11. மேற்படி வரைப்படத்தில் மரபட்டறை தென்மேற்கு பகுதியில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மரப்பட்டறை அமைந்துள்ள இடம் 2ம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட இடம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி என் கணவரின் சகோதரியின் கணவர் என்ற முறையில் 1ம் பிரதிவாதிக்கு மரப்பட்டறை அமைக்க அனுமதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தை நான் நில அபகரிப்பு செய்து வைத்து கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ள எந்த பரிகாரமும் கிடைக்க கூடியதல்ல என்றால் சரியல்ல. என் பெயரிலும் என் கணவர் பெயரிலும் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல.

12. தற்போது என் பெயரில் 16 சென்ட் சொத்திற்கு பட்டா இல்லையென்றாலும் தீர்வை செலுத்தவில்லையென்றாலும் சரியல்ல. நான் பொய்யான சங்கதிகளை கூறி இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்க கூடியதல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

( ஒப்பம் )
மாவட்ட உரிமையியல் நீதிபதி
இரணியல்